**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.160 /2024**

**Deposition of P.W.** 11

Name : திரு. பேச்சிமுத்து பாண்டி

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**29.04.2026**

**Accused** not Produced. Letter received from Jail Authority V.C. is not working concern defence counsel present. Witness also present. No objection by defense counsel to examine witness without presence of the accused.

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது மதுரை மாவட்டம் கீழவளவு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் தக்கலை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது 01.12.2023ம்தேதி காலை 08.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்த போது சுஜின் என்பவர் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மை படி நிலைய குற்ற எண். 507/2023 பிரிவுகள் 294(பி), 332, 427, 307 இ.த.ச ஆக வழக்கு பதிவு செய்தேன் அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5. அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை

விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் தொடர்பாக மருத்துவமனையிலிருந்து காவல்நிலையத்திற்கு தகவல் எதுவும் கிடைக்கவில்லை. முதல் தகவல் அறிக்கையில் குற்ற நிகழ்வு நாள் 29.11.2023 என்றும், நேரம் இரவு 11.00 மணி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு 01.12.2023ம் தேதி காலை 08.00 மணிக்கு தகவல் கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணத்தை குறிப்பிட்டு கூறவில்லை. சம்பவ இடம் சஜீவன் ராஜ் வீட்டின் முன்பு என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. தேதியில் மாற்றமானது புகார் மனுவை கொடுக்கும் போது புகார்தாரரால் திருத்தப்பட்டிருந்தது. உடைந்த செல்போண் குறித்து நிறமோ, வேறு விபரங்களோ குறிப்பிடப்படவில்லை. உடைந்த செல்போணை புகாருடன் சேர்த்து கொடுப்பதாக குறிப்பிடவில்லை உடைந்த செல்போணின் சேதமதிப்பு புகாரில் குறிப்பிடப்படவில்லை. நான் சொன்னதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் போலீசார் என்பதால் பொய்யான புகாரின் படி வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. எதிரி மீது குண்டர் சட்டப்படி நடவடிக்கை எடுக்க உயரதிகாரிகளின் உத்தரவு படி பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.